**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**PW 1– OS. No. 154/2020**

2024 ம் ஆண்டு மார்ச் மாதம் 26 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி கூடுதல் சார்பு நீதிபதி திருமதி.எம்.மேகலா மைதிலி பி.ஏ.பி.எல் முன்னிலையில் திருமதி.ரேகா கிரேடு 2 பேன்ச் கிலர்க் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : திருமதி.பிருந்தா தேவி | தொழில் : |
| க/பெ. : திரு, ராதா கிருஷ்ணன் | வயது : 40 |
| முகவரி : | |

**வாதி தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி. எனது தரப்பு சாட்சிக்காக நிரூபண பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். 1 ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். (அசல் சரிப்பார்க்கப்பட்டது) அது வாதி தரப்பில் **வா.சா.ஆ** 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது வாக்காளர் அடையாள அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். (அசல் சரிப்பார்க்கப்பட்டது) அது வாதி தரப்பில் **வா.சா.ஆ** 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.1 ம் வாதியின் வங்கிக் கணக்கு புத்தகம் தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் **வா.சா.ஆ** 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது தகப்பனார் பெயரிலான வங்கிக் கணக்கு புத்தகம் தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் **வா.சா.ஆ** 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 4.6.1996 தேதிய கிரய பத்திரம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில்

**வா.சா.ஆ** 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 20.3.2009 தேதிய எனது தகப்பனார் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்கிறேன். அது வாதி தரப்பில் **வா.சா.ஆ** 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு பிராது படி தீர்ப்பு அளிக்க வேண்டுமாய் கேட்டு கொள்கிறேன்.

**முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் தாக்கல் செய்வதற்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

M MEKALA MYTHILI

Digitally signed by M MEKALA MYTHILI
Date: 2024.03.26 19:00:01 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.